சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:24.06.2025

DW3: செந்தில்குமார் த/பெ– (லேட்).சுப்பாராஜ்

<u>**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

நான் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் சூலக்கரையில் உள்ள இ–சேவை மையத்தில் வேலை பார்த்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலமானது எனது தாயாருக்கும் சேர்த்து நான் தாக்கல் செய்துள்ளேன். அதில் எனது தாயாருக்காகவும் தாக்கல் செய்கிறேன் என்ற வாசகம் இல்லை என்றால் சரிதான். எனது தாயார் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க உள்ளார். தற்போது சாட்சி தனக்காக மட்டும் சாட்சியம் அளிப்பதாக உள்ளார். வாதி எனது குடும்பத்திற்கு ஏற்கனவே அறிமுகம் ஆனவர். வாதி 12.03.2015 ல் எனது தாயாருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்புக்கு முன்பு எங்கள் குடும்பத்திற்கும், வாதிக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு பெற்ற பின்பு தான் காவல்நிலையத்தில் வாதி மீது புகார் கொடுத்தேன். வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள கையெழுத்து என் தாயாருடைய கையெழுத்து என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். நான் கால்ரிக்கார்டு செய்த செல்போன் 2015 ம் ஆண்டு வெளிவந்த ஜியோ மாடல் ஆண்ட்ராய்டு என்றால் சரிதான். எனது தாயார் படிக்கவில்லை. எனது தாயாருக்கு ஆன்ட்ராய்டு போன் உபயோகப்படுத்த தெரியாது, அதனால் தான் நான் பதிவு செய்தேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதி எந்த தேதியில் எந்த நேரத்தில் போனில் பேசினார் என்று சொல்லவில்லை. வாதி பேசுவதை பதிவு செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏன் வந்தது என்று

சொன்னால் அவர் 40,000/— கடன் கொடுத்துவிட்டு 4 லட்சம் கேட்டதால் பதிவு செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்தது. போனில் 4 லட்சம் கேட்பார் என்று எனக்கு எப்படி தெரியும் என்றால் வாதி அனுப்பிய நோட்டீஸ்—ன் மூலம் தெரியும். கைபேசியை ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி சட்டப்படி சட்ட அறிவிப்பு அனுப்பிய பின்பு என் தாயாருடன் பேசுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றும், அந்த உரையாடல் வாதியினுடையது அல்ல என்றால் சரியல்ல. நான் இ—சேவை வைத்து நடத்தும் அனுபவம் உள்ளதால் வாதியின் கடன் தொகையை மோசடி செய்ய வேண்டும் என்ற நோக்கில் கற்பனையாக சங்கதிகளை உருவாக்கி அதற்கு போலியான சாட்சியங்களை ஏற்படுத்தி உள்ளேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லாதது என்றால் சரியல்ல. அதனால் எனது சாட்சியம் நிராகரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.